
# சிறுதொழில் இருக்கும் வரை ஆர்.வீ.யின் புகழ் நிலைத்திருக்கும்



அன்புடையீர்,

துன்பம் உலகத்தில் ஏற்படும் பொழுது அந்த துன்பங்களிலிருந்து மக்கள் விடுபட வேண்டும் என்பதற்காக அதைப் போக்க பல அற்புதமான மனிதர்களை இறைவன் இந்த பூமியில் தோன்ற வைத்தார்கள்.

அடிமையாக ஆங்கிலேயர்களின் பிடியில் 200 ஆண்டு காலமாக நமது பாரத மண்ணில் பிறந்த இந்தியர்கள் சொல்லற்கரிய துன்பங்களை ஏற்று வாழாமல் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அந்த மக்களின் உரிமையை - சுதந்திரத்தைக் காக்க பல தன்னலம் அற்ற தியாகிகள் தோன்றினார்கள். அவர்களில் நம் மனதில் நிலையாக ஆண்டு கொண்டு இருக்கும் - உலகத்தினால் அஹிம்சையின் பிறப்பிடமாகப் போற்றப்படும் தேசப் பிதா அண்ணல் காந்தியடிகள் அவர்கள் அடிமைத் தனத்தைக் களையவும், மக்கள் வளமான வாழ்வைப் பெறவும் போராடி - பல தியாகங்களைச் செய்து சுதந்திரத்தைப் நமக்குப் பெற்றுத் தந்தார்கள்.

விவசாயம் பல நிலைகளில் வளர்ச்சி கண்டிருந்தாலும், அன்றைய காலகட்டத்தில் இந்திய பொருளாதாரம் திக்கு தெரியாத கட்டத்தில்தான் இருந்தது. பொருளாதார வளர்ச்சி அடையாத அந்த காலத்தில், மக்களின் வாழ்வுக்கும் தொழில் வளர்ச்சிக்கும் நிலையான வழிமுறைகளைப் பற்றி தொடர்ந்து சிந்தனை செய்து வந்தார்கள். பொருளாதாரத் தேக்க நிலைக்கு நிரந்தரத் தீர்வு சிறுதொழில் மட்டும்தான் என்பதை பின்னர் அறிந்தனர் அந்த தன்னலமற்ற தியாகிகள்.

இந்தியாவின் வறுமையை சிறுதொழில்களால் மட்டுமேபோக்க முடியும், - வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும், மக்களும் கல்வியில் மேம்படுவது சாத்தியமாகும் என்பதை சிந்தித்து அமரர் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு, பெருந்தலைவர் காமராஜர், அமரர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் போன்ற தன்னலம் அற்ற தியாகிகள் - தலைவர்கள் முனைப்போடு ஈடுபட்டார்கள்.

அன்று காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது, அவருடைய அமைச்சரவையில், அனைத்துத் துறைகளிலும் தேர்ச்சி பெற்ற மாணிக்கமாக நின்றவர் நமது அமரர் ஆர்.வீ. அவர்கள்தான். அவரது சிறப்புகளை - முற்போக்குச் சிந்தனைகளை முன்னிறுத்தி வழங்கப்பட்டது தொழில்துறை.

நேரு, லால்பகதூர் சாஸ்திரி, காமராஜர், அமரர் ஆர்.வீ போன்றவர்கள் தொழில் கூடங்கள் ஏற்படுத்திக் கொடுத்தால் தொழில் வளரும் என்பதைச் சிந்தித்து இந்திய வரலாற்றில் முதன் முதலாக கிண்டியில் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கி அதனை காமராஜர் அவர்கள் தலைமையில், பண்டித நேரு, லால்பகதூர் சாஸ்திரி போன்றவர்களைக் கொண்டு திறந்து வைத்து பல சிறுதொழில்கள் முன்னேற சாலைகள், தடையற்ற மின்இணைப்பு, தீயணைப்பு நிலையம், தொழிலாளர் குடியிருப்பு போன்ற கட்டமைப்பு வசதிகளைச் செயல்படுத்தி, படித்த பல தொழில் அறிஞர்களை அழைத்து கிண்டி தொழிற்பேட்டையில் சிறுதொழில் துவங்க தொழிற் கூட மனைகளை - தொழிற்கூடங்களை சரித்திரத்தில் இல்லாத அளவு சலுகை வாடகையில் ஒரு சதுர அடிக்கு 18 பைசா என்ற வாடகையில் வழங்கினார். அது மட்டுமல்லாது மூலப்பொருட்களையும் அதற்கான சேமிப்புக் கிடங்குகளையும் ஏற்படுத்தி, தொழில்முனைவோர்களை அழைத்து மேலும் என்னென்ன தேவையோ அவற்றை சலுகை விலையில் தந்து சிறுதொழில் தழைக்க நடவடிக்கை மேற்கொண்ட சிறுதொழில் காவலர்தான் அமரர் ஆர்.வீ.

மத்திய அரசின் மூலம் நெய்வேலி லிக்னைட் கழகம், பாரத மிகுமின் நிலையம், பாரத கனரக உற்பத்திக்கூடம், ரெயில்பெட்டித் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளை தமிழகத்திலும் நிறுவுவதற்கு அயராது உழைத்தவர்களில் முதன்மையானவர்தான் ஆர்.வீ. அவர்கள்.

சிறுதொழில்கள் வளர்வதற்கு பெரும்தொழில்களின் துணை தேவை என்பதை அக்காலத்திலேயே தீர்க்க தரிசியைப் போன்று சிந்தித்து உணர்ந்தவர் ஆர்.வீ. இதற்காக பிரத்தியேக முயற்சிகளை மேற்கொண்டு பெரிய தொழில் அதிபர்களை அணுகி தமிழகத்தில் தொழில் நிறுவனங்களைத் தொடங்குங்கள்; அதற்குத் தேவையான அனைத்து சலுகைகளையும் ஏற்படுத்தித் தருகிறோம் என்று அவர்களுக்கு அன்புக் கட்டளையிட்டு பல்வேறு சிமெண்ட், இரும்பு எஃகு, சைக்கிள் உற்பத்தித் தொழிற்சாலைகளை தமிழகத்தில் துவங்கி - சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு எண்ணற்ற வாய்ப்புகளை ஏற்படுத்தி தொழிற்புரட்சியைத் துவக்கி வைத்த பெருமைநமது ஆர்வியைச்சாரும் என்றால் அது மிகையல்ல.

அது மட்டுமா? தொழில்துறை அமைச்சராக இருந்த போது ஒவ்வொரு வாரமும் எத்துணை வேலையாக இருந்தாலும் தொழில்முனைவோர்களை அழைத்து கலந்துரையாடி அவர்களது குறைகளைக் கேட்டறிந்து, களைவதற்கான தீர்வுகளையும் எடுத்துரைத்து சிறுதொழில்களை தன் கண்களைப் போல் பாதுகாத்த பகலவன் அமரர் ஆர்.விக்கு நிகரான தொழில்துறை அமைச்சர் இதுவரையில் யாரும் இல்லை என்ற பெருமைக்குச் சொந்தக்காரார் என்பதில் எள்ளளவும் ஐயம் வேண்டாம்.

சென்னையில் மட்டுமல்லாது, அம்பத்தூர், தாம்பரம், மதுராந்தகம், காஞ்சீபுரம், மதுரை, திருச்சி, திருநெல்வேலி,

சேலம், தூத்துக்குடி, கோவை என்று தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஆர்.வீயின் பெருமுயற்சியினால் உருவான தொழிற்பேட்டைகள் இன்று அவர் விதைத்த விதை ஆலமரமாக வியாபித்து சிறுதொழிலின் வளர்ச்சிக்கு வேண்டியதை வாரி வழங்கிக் கொண்டு அவரின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றன.

அன்று அமரர் ஆர்.வீ அவர்கள் தீர்க்க தரிசியைப் போன்று வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க சிறுதொழில்களால் மட்டும்தான் முடியும் என்று சிந்தித்து போற்றி வளர்த்த சிறுதொழில்களில் இன்று வேலை செய்ய ஆள் கிடைக்காத நிலை உருவாகி இருக்கிறது என்றால் அமரர் ஆர்.வீ. அவர்களின் சிந்தனை எத்துணைச் சிறப்பு வாய்ந்தது என்பது அனைவருக்கும் திண்ணம். வட மாநிலங்களிலிருந்து இன்று தமிழகத்திற்கு வேலையாட்களை வரவழைத்து நமது தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்ற நிலையில் இருக்கின்றோம்.

அமரர் ஆர்.வீ. அவர்கள் ஒரு சாதாரண குடும்பத்தில் தஞ்சை மாவட்டதில் பிறந்தார். மெத்தப் படித்தும், தான் மட்டும் சம்பாதிக்க வேண்டும் என்ற சிந்தனை இன்றி, தொழிலாளர்கள் உரிமைகளைக் காக்க - குரல் கொடுக்க தொழிற்சங்கங்களில் தன்னை இணைத்து கொண்டு பின்னர் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு நாட்டின் சுதந்திரத்திற்காக பெருந்தலைவர் காமராஜர், சத்தியமூர்த்தி போன்றவர்களுடன் இணைந்து போராடினார்.

பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியது மட்டுமல்லாமல் தமிழகத்தில் காமராஜரின் அழைப்பை ஏற்று அவரது அமைச்சரவையில் 10 ஆண்டுகளாகவும், ஐக்கிய நாடுகளின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராக 24 ஆண்டுகளும், மத்திய நிதியமைச்சராகவும், பாதுகாப்புத்துறை அமைச்சராகவும் பின்னர் துணை ஜனாதிபதியாகவும் முடிவில் இந்திய ஜனாதிபதியாகவும், உலகமே வியந்து போற்றும் அளவிற்கு தேசிய சர்வதேச பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட பெருமைக்குரியவர் அமரர் ஆர். வீ. அவர்கள்.

தமிழக வரலாற்று மகுடத்தில் ஒரு வைரக் கல்லாக - ஒரு சாதரான குடிமகனாக - ஒரு மாபெரும் ஜனாதிபதியாக முதல் குடிமகனாக உயர்ந்த அமரர் ஆர்.வீ அவர்களை போற்றி நினைவிருக்கும் வரை நெஞ்சில் வைத்து வாழ்வோம் என்ற உறுதி மொழி எடுப்போமாக !

செயல்வீரராக - மாமனிதராக - சாதனையாளராக வாழ்ந்த அமரர் ஆர்.வீ. அவர்கள் தனது 99ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்கள். பாரத நாட்டின் மாபெரும் தலைவருள் ஒருவராகத் வழிநடத்திச் சென்ற அமரர் ஆர்.வீ அவர்களின் நினைவாக நாம் கொண்டாடுவதுதான் இந்த 100ஆவது ஆண்டு விழா.

அவர்களின் நினைவேந்தலை மேதகு மேனாள் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்ஸாண்டர் அவர்களைக் கொண்டும், திரு.முராரி முன்னிலையிலும் தமிழகத்தில் உள்ள சிறுதொழில் முனைவோர்கள் அனைவரது பங்கேற்போடும் தமிழ்நாடு சிறு குறுந்தொழில் சங்கக் கூட்ட அரங்கில் ஏற்பாடு செய்தோம். அதில், முன்னாள் இந்தியன் வங்கித் தலைவர் கோபாலகிருஷ்ணன், மூத்த சிறுதொழில் தலைவர்கள் திரு.வி.எஸ். நரசிம்மன், திரு.கே. கோபாலகிருஷ்ணன் ஆகியோர்கள் பங்கேற்றனர்.

அவர்களுக்கு நாங்கள் அஞ்சலி செலுத்துகின்றோம் - விழா கொண்டாடுகின்றோம் என்றால் அவர் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார் என்றோ தமிழக அமைச்சராக இருந்தார் என்பதால் மட்டுமல்ல. அவர் ஒரு சிறந்த தீர்க்க தரிசியாக இருந்தார் ; சிறுதொழில்களின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து அவற்றைப் பாதுகாக்கும் முறைகளைச் செயல்படுத்தினார். அவருக்கு நமது நன்றியைக் காணிக்கையாக்குவது நமது கடமையாகும் என்பதற்கே!

அவர் பதவியில் இருந்தபோதும், பதவியில் இருந்து ஓய்வு பெற்ற போதும் சிறுதொழில்களின் நலன்களைப் பாதுகாக்கும் குறிக்கோளைக் கொண்டிருந்தார். எங்கள் துறை வளர அவர் வழிகாட்டியாக - ஒரு கலங்கரை விளக்கமாக விளங்கினார்.

முன்னாள் சங்க தலைவர்களான திரு.ஏ.என். சீனிவாச ராவ் அவர்கள் எங்கள் துறைக்கான ஒரு பிரத்தியேகமான வங்கி வேண்டும் என்று கேட்ட போது உடனடியாக அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு சிட்பி வங்கியை உருவாக்கித் தந்தவர்களில் முதன்மையானவர் அமரர் ஆர்.வி. என்பதை நன்றியுடன் நாம் குறிப்பிட்டாக வேண்டும். மிக முக்கியமாக, அவர் இந்திய ஜனாதிபதியாக இருந்த போது நான்கு முறை கிண்டி தொழிற்பேட்டைக்கு வந்து எங்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றின் தீர்வுகளுக்கு வழி ஏற்படுத்தித் தந்தார். அதே போன்று அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கும் சென்று பார்வையிட்டு அவர்கள் குறைகளை போக்க நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

அவர் துணை ஜனாதிபதியாக இருந்தபோது கிண்டியில் இந்தியன் வங்கியையும், ஓய்வு பெற்ற பின்னர் சென்டரல் பாங்க் ஆப் இந்தியாவையும் ஏற்படுத்தித் தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு முறை, ஆர்.வீ. அவர்கள் ஜனாதிபதியாக இருந்தபோது கிண்டி தொழிற்பேட்டையில் நடைபெற்ற கூட்டத்தில் மின் தடங்கல் ஏற்பட்டது, அப்பொழுது அனைவரும் கலைந்து செல்ல நினைத்த போது, அவர்களை நோக்கி கலைந்து செல்ல வேண்டாம்; சிறுதொழில்களின் ஒற்றுமையே நாட்டின் ஒற்றுமை. ஆகவே யாரும் பிரிந்து செல்ல வேண்டாம் நாம் நமக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலந்துரையாடல் முடிந்த பின் செல்லலாம் என்று கூறி தொடர்ந்து உரையாற்றிய பெருந்தன்மைவேறு யாரிடம் காண முடியும் ?

நிகழ்ச்சியில் ஏற்பட்ட மின்தடங்கலுக்காக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆர்.வீயைச் சந்தித்து உரையாடும் போது முதலமைச்சரிடம் 'தொழில் முனைவோர்கள் அனைவரும் எனது நண்பர்கள் அவர்களது நிகழ்ச்சியில் எதிர்பாராத விதமாக நடைபெற்ற தடங்கலுக்காக அவர்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம்' என்று கூறியதோடு மட்டுமல்லாமல் சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு தமிழக அரசின் ஆதரவினையும் தாருங்கள் என்று கூறியுள்ளார். இத்தகைய மாண்புமிக்க கருணைமிக்க சிறுதொழில்களின் மீது பற்று கொண்ட தலைவரை கண்டிருக்கவும் முடியாது இனிமேல் காண்பதும் அரிது.

மேலும், செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது அவரிடத்தில் என்னை அழைத்துச் சென்று இவர் எனது நண்பர், இவரையும் அவர் சார்ந்த சிறுதொழில் க்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களிடமும் என்னை அழைத்துச் சென்று இதே போன்று சிறுதொழில்களுக்கு ஆதரவினைக் கேட்ட

இயக்கத்திற்கும் தாங்கள் உதவிட வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தார்கள். அது மட்டுமல்லாமல், டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களிடமும் என்னை அழைத்துச் சென்று இதே போன்று சிறுதொழில்களுக்கு ஆதரவினைக் கேட்ட மாண்பு என்றும் எனது நினைவிலிருந்து அகலாது.

மேலும், அவர் ஓய்வு பெற்றபின் உலகமயமாக்களும், தாராளமயமாக்களும் உலகெங்கும் பரவிய நேரம். இவர் எல்லா பெரிய தொழிலக அதிபர்களை அழைத்து அண்ணா பல்கலைக்கழகத்தல் பொருளாதார நிபுணர் டாக்டர் ராசா செல்லையா அவர்கள் தலைமையில் Industrial reform and adjustment policy என்ற கருத்தரங்கை ஏற்பாடு செய்து அதில் ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் அவர்களிடம் வல்லுநர் குழுவின் அறிக்கையை அளித்து-தொழிலைக் காத்திட அவர் எடுத்த முயற்சி இன்றும் எல்லோராலும் இன்றுவரை போற்றும் புகழ் பெற்ற ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை.

கிண்டி தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கத்தையும், அம்பத்தூர் டாக்ட் சங்கத்தையும் அழைத்து சத்யபாமா பல்கலைக்கழக வேந்தர் ஜே.பி.ஆர். அவர்களுடன் கலந்துரையாடி சிறுதொழில் வளர ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்கி அந்த கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு சிறுதொழில் வளர உழைத்த அவர்களின் தொண்டினை மனதார ஏற்றுக் கொண்டு நன்றி கூறியே ஆக வேண்டும்.

அரசியலில் அவர் தொண்டாற்றி, உயர்ந்த நிலைக்கு வந்தாலும் அவர் தேசிய காங்கிரஸ் தலைவர் என்ற போதும் நமது மாநிலத்தில் பிற கட்சிகளின் தலைவர்களான மறைந்த முதலமைச்சர் திரு.சி.என்.அண்ணாதுரை, டாக்டர் கலைஞர், அமரர் எம்.ஜி.ராமச்சந்திரன், செல்வி ஜெயலலிதா. திரு.வைகோ., கம்யூனிஸ்டு கட்சி தலைவர்கள் ஆகியோருடன் கட்சி வேறுபாடுகளை மறந்து மக்களுக்கு நன்மை தரும் நடவடிக்கைகளை எடுக்க உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவரது தமிழக மக்கள் மீதான பற்றினையும் அதன் மூலம் புரிந்து கொண்டோம்.

மேலும், இளைய தலைமுறை இந்திய தேசத்தின் பாரதப் பிரதமராக இருந்த அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் தமிழகத்தில் கொலையுண்ட போது, தில்லியில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பு கருதி ராணுவத்தை முடுக்கி விட்டு எந்த ஒரு தமிழருக்கும் எந்தவித தீங்கும் ஏற்படாத வண்ணம் உடனடி நடவடிக்கையினை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஆர்.வீ மேற்கொண்டதை தமிழர்களாகிய நாம் என்றும் மறவலாகாது.

சென்னையில் உள்ள டிரைடன்ட் ஹோட்டலில் டான்ஸ்டியா சார்பாக ஒரு தேசிய சிறுதொழில் மாநாடு நடைபெற்ற போது அம்மாநாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் அமரர் ஆர்.வீ அவர்கள் கலந்து கொண்டார்கள். அவர் காலையில் மட்டும் அம்மாநாட்டில் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால், காலையில் மாநாட்டில் உரையாற்றிய பின்னர் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் மதியம் கருத்தரங்கில் கலந்து கொண்டு தொழில்முனைவோரோடு தொழில்முனைவோராக அமர்ந்து ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பார்வையிட்ட பாங்கு நமது நினைவில் என்றும் நிற்கக் கூடியது. தொழில்சங்க தலைவர்கள் ஒவ்வொருவருடனும் அங்கு கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த அவருக்கு நாம் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டவர்களாகின்றோம்.

பிரச்சினைகளைக் கேட்டறிந்த அவருக்கு நாம் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டவர்களாகின்றோம்.

அமரர் ஆர்.வி. பற்றி நாம் சொல்ல வேண்டுமென்றால் இன்னும் அதிகமான பக்கங்கள் தேவைப்படும் என்றே கருதுகிறோம்.

அவரது சிறப்பினை - அவர் சிறுதொழில்களுக்கு ஆற்றிய தொண்டிற்கும் சேவைக்கும் நினைவேந்தவே அவரது 100 ஆவது பிறந்த நாள் விழாவினை கிண்டி தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பாக தொழிற்பேட்டை சிறுதொழில் விழாவாக கொண்டாட எண்ணினோம். இதற்கான ஒரு குழுவினையும் அமைத்தோம். அது மட்டுமல்ல, கிண்டி தொழிற்பேட்டையில் அமரர் ஆர்.வீ அவர்களின் ஆளுயர திருவுருவச் சிலையினை நிறுவ எண்ணி அரசின் அனுமதிக்கு விண்ணப்பித்திருக்கின்றோம்.

ஆயினும், இன்று அவரது இந்த 100ஆவது ஆண்டு விழாவில் அவர்களுக்காக இரங்கல் கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கு மத்திய அரசோ, மாநில அரசோ அல்லது பிற தொழிற்சங்கங்களோ முன்வரவில்லை என்பது நாம் அனைவரும் வருந்தத்தக்க விஷயமாகும்.

எதுவாக இருப்பினும், நாங்கள் - கிண்டி தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்முனைவோர்கள் அனைவரும் ஆர்.வீ. தாசனாக இருப்பதை பெருமைக்குரிய விஷயமாகக் கருதுகின்றோம்.

அமரர் ஆர்.வீயின் வாழ்க்கை - அவரது சேவை சிறுதொழில் முனைவோர்களுக்கு - ஒரு உந்துகோல் - ஆட்சியாளர்களுக்கு ஓர் வழிகாட்டி - பொதுமக்களுக்கு - வருங்கால சந்ததியினருக்கு சிறந்த ஒரு வரலாறு !

அவரது வழியில் நின்று சிறுதொழில்கள் ஏற்றம்பெறுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு உழைக்க உறுதி பூண்டுள்ள நாங்கள், அமரர். ஆர்.வீ.யின் பிறந்த நாளை தேசிய சிறுதொழில் தினமாக அறிவிக்க ஆவன செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படுவோம் !

முடிவாக, மறைந்த பேரறிஞர் இன்றும் என்றும் ஏழைகளின் எண்ணத்தில் வாழும் அமரர் அண்ணா அவர்கள் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மனம் உண்டு என்று கூறிச் சென்றதற்கு ஏற்ப இன்றைய மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து இந்த மண்ணின் மைந்தருக்கு-மாசில்லா மாணிக்கமாம் அமரர் ஆர்.வி. அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் ஓர் ஆளுயர உருவச் சிலையினை சென்னை-கிண்டி தொழிற்பேட்டையில் திறந்து வைக்கும் ஓர் பெரிய விழாவினை சிறப்பாக கொண்டாட வேண்டும். அதுவே, காங்கிரசு, மற்ற தோழமை கட்சிகள், இந்திய ஜனநாயகத்தில் பற்றுள்ள மற்ற எல்லா கட்சிகள் மற்றும் வக்கீல்கள் சங்கம், தொழிற்சங்கங்கள், சி.ஐ.ஐ., பிக்கி, அசோசம் போன்ற பெரும் சங்கங்கள், வல்லுநர்கள், பெரும் தொழில் அதிபர்கள் போன்றோர் விரும்புவது ஆகும் என்றால் அஃது மிகையல்ல!

என்றும் உங்கள்,

**கே.வி.கனகாம்பரம்**
தலைவர்-அய்மா